1993 ஏப்ரல் 23] [திரு. செ. கு. தமிழரசன்]

பெருந்தகை வள்ளுவர் அவர்கள் சொல்லும் போது—

'' இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ''

என்றார்.

ஏனவே, இந்த நிலையை நாம் மாற்றுவதற்கு சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். ஏராளமான சலுகைகளைத் தருகிறோம். ஆனாலும் கூட... (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். திருவிழா, கோவில் போன்ற இடங்களில் பார்க்கிற போது வரிசையாக பிச்சைக்காரர்கள் உட்கார்ந்து இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, அவர்களை எப்படியாவது, முதியோர் நிலையங்களுக்கோ, தொழு நோய் நிலையங்களுக்கோ, மறு வாழ்வு நிலையங்களுக்கோ கட்டாயப்படுத்தியாவது கொண்டு போய் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைக் கடுமையாக தடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒரே ஒரு வரியில் சுருக்கமாகச் சொல்கிறேன். எந்தச் சட்டமானாலும் அவை மக்களுக்காக இருப்பவை. மக்களுக்காகத் தான் சட்டம். சட்டங்களுக்காக மக்கள் இல்லை என்ற நிலையில் சட்டங்களை நாம் கொண்டு போக வேண்டும். அதுதான் சட்டத்தின் வெற்றியாக இருக்க முடியும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.

7. அறிவிப்புகள்.

உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: சென்னை நகர போலீஸ் கமிஷனரிடமிருந்து பேரவை உறுப்பினர் திரு. பி. வி. ராஜேந்திரன் இன்று 1-00 மணியளவில் கோட்டையின் முன்னர் கைது செய்யப்பட்டதாகத் தகவல் எனக்கு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

பிற்பகல் 1-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் பெருமைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே சட்டத்தினுடைய ஆட்சி நடைபெற வேண்டும், அப்போதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்கிற அடிப்படையிலேதான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மற்ற சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அமுல் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சட்டத்தினுடைய ஆட்சி எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம், நேற்றையதினம் கூட காவல்துறை மானியத்திற்குப் பதில் அளித்துப் பேசிய நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு நிலைமைகளை எடுத்துச்சொல்லி, விளக்கங்களைத் தந்து, சட்டத்தினுடைய ஆட்சி, தன்மை பற்றி விளக்கிச் சொன்னார்கள்.

அங்கே சட்டமன்றத்திலே கூட சட்ட விதிகளை எல்லாம் நாம் எப்படி பின்பற்றி வருகிறோம் என்பதை இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நாம் பார்த்து வருகிறோம். சாதாரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோது, ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டுவதும், ஆளும் கட்சியை குறை சொல்லுவதுமாகத் தான் நாம் பார்த்து வந்திருக்கிறோம். ஆனால், இன்றைய தினம் பத்திரிக்கையை எடுத்து நாம் பார்க்கிறபோது தினமணி பத்திரிகையிலேயும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலேயும், உறிந்து பத்திரிக்கையிலேயும், சட்டசபையில் நடந்த நிகழ்ச்சிகளைக்குறித்து தலையங்கங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. அதிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அரசியல் சட்டத்தையும், சட்டசபை விதிகளையும் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த தலையங்கங்களிலேவற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, சட்டத்தினுடைய ஆட்சி, இங்கே விதிகள் பின்பற்றப் படுகின்றன என்பதற்கு இதைவிட வேறு ஒரு எடுத்துக்காட்டை